சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **573 / 2018**

மனுதாரர் / எதிர்மனுதாரர் எ.ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **22.02.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரவி | கிராமம் : | |
| த/பெ: | பொன்னுசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

<u>முதல் விசாரணை</u>

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது சாட்சியத்தை ஏற்று மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்து சமயத்தில் பேருந்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். இந்த விபத்து சம்பந்தமாக விபத்து சமயத்தில் எனது பேருந்தில் பயணம் செய்த சதீஸ்குமார் என்பவர் தான் புகார்க்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தது சுமார் 10.45 மணியிருக்கும். எங்கள் பேருந்தில் பயணம் செய்தவர் நான் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் பேருந்தை சென்று விபத்தை ஏற்படுத்தியதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பெட்டவாய்த்தலை காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தை தாண்டி தான் கரூர் செல்லவேண்டும். அந்த சாலை நல்ல அகலமான தேசிய நெடுஞ்சாலையாகும். சம்பவம் பெட்டவாய்த்தலை பெட்ரோல் பங்க் அருகில் நடந்தது. நான் சம்பவம் நடந்த உடன் பேருந்தை நிறுத்தாமல் போலிசாருக்கு தகவல் தெரிவிக்காமல் பேருந்தை கரூர் நோக்கி ஓட்டிச்சென்றேன் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எனக்கு எந்த சம்பந்தமும் கிடையாது. பெட்டவாய்த்தலை போலிசார் இந்த விபத்து சம்பந்தமாக என்மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். என்மீது பிரிவுகள் இ.த.ச.279, 304 (A), 202, உ/இ 134 (a,b) மோட்டார் வாகன சட்டம் படியும் நடத்துநர் மீது 202 இ.த.ச 134 (a,b) மோட்டார் வாகன சட்டம் படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை மறைத்து நான் காவல் துறையில் தெரிவிக்காமல் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் காரணம் இல்லை என்றும் முதல் தகவல் அறிக்கை தவறான என்று நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த விபத்திற்கு நான் தான் காரணம்

என்பதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக என் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னை ஒரு மாதம் பணியிடை நீக்கம் செய்தார்கள். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் முறையாக தலைகவசம் அணிந்து கவனமாகவும் மெதுவாகவும் வந்தார்கள் என்றும் நான் தான் பேருந்தை கவனக்குறைவாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல எனக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த விபத்தில் இறந்துபோன ஒரு நபருக்கு திருச்சி நீதிமன்றத்தில் என் மீது தான் தவறு என்று இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் எங்கள் நிறுவனம் தான் மனுதாரருகளுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ரவி

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
Date: 2024.02.22 18:24:35 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.